தமிழர்க்கு சுயநிர்ணய உரிமை வழங்கவேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 20 இதழ் 364
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-2-1995


## ஐ. நா.வில் கோரிக்கை

(லண்டன்)

தமிழர் தாயகத்தை அங்கீகரித்து தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டுமென ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் மாநாட்டில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு தமிழர்

(4ம் பக்கம் பார்க்க)

## மோட்டார் வாகன ஓட்டுநர்கள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

கடந்த பல வருடங்களாக தமிழீழப்பிரதேசத்தில் மோட்டார் வாகன ஓட்டுனர்களுக்கும், மோட்டார் சயிக்கிள் ஓட்டுனர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையால்

(4ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் மீது இராணுவம் துப்பாக்கி சூடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் உள்ள வேளை

(4ம் பக்கம் பார்க்க)

### பேச்சு தடைப்பட்டபோதும்

# புலிகள் சமாதான முயற்சிகளில் நம்பிக்கையை இழக்கவில்லை

## பி.பி.சி. சந்தேசய கூறுகிறது

[கொழும்பு]

சமாதாதானப் பேச்சுக்கள் தற்போது நடைபெருதபோதிலும் சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் இன்னும் நம்பிக்கையிழக்கவில்லை. பி. பி. சி. சிங்கள சேவை சந்தேசய இவ்வாறு தெரிவித்தது. கண்காணிப்புக் குழுவினரை சந்திப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்திருப்பது இதனை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என சந்தேசய மேலும் தெரிவித்தது.

நோர்வே, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து கண்காணிப்புக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு இப்போது தயாராக உள்ளனர். இவர்களைச் சந்திப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் விடுதலைப்புலிகளும் அங்கம் வகிக்கும் நான்கு கமிட்டிகளின் முதலாவது கூட்டம்

(4ம் பக்கம் பார்க்க

## கண்காணிப்பு குழுவினர் ஞாயிறு 5ம் திகதி யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுக்கும்— இராணுவத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை கண்காணிக்க நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையாழ்ப்பாணம் வரவுள்ளது.

இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்து உரையாடிய பின்பு தங்கள் கடமைகளை ஆரம்பிப்பார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல்தவிர்ப்பை கண்காணிக்க அரசினுல் நியமிக்கப்பட்ட நான்கு சமாதானக் குழுக்களுக்கும் தலைமை தாங்கும் நோர்வே, நெதர்லாந்து,

(4ம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளை

## குழப்பவேண்டாம்

— ரத்வத்த கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் பல்வேறு சக்திகள் ஈடுபட்டு வருவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல்

(2ம் பக்கம் பார்க்க)

## அனுமதேய கடிதங்களை எழுதவேண்டாம்

அமைச்சர் ரத்வத்த

[கொழும்பு]

பாதுகாப்பு அமைச்சின்கீழ் உள்ள எந்தவொரு நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அநாமதேய கடிதங்களை எழுதவேண்டாம் என்று பாதுகாயபு அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

### காணுமல் போனேர் விவகாரம்:

## விசாரணைக் குழுக்கள் பற்றி பொதுமக்கள் முறைப்பாடு

(கொழும்பு)

காணுமல் போனேரைப்பற்றி விசாரணை செய்ய ஜனதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் கொழும்பிலிருந்து இயங்குவதினுல் வெளிமாவட்டங்களில் உள்ள மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக பொது மக்கள் அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள்.

வெளிமாவட்டங்களில் வாழும் பல வறிய குடும்பங்கள் கொழும்புக்கு வர முடியாத நிலையில் இருப்பதினுல் அவர்கள் தமது குடும்பங்களில் காணுமல்போனேர் பற்றிய விபரங்களைத் தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கின்

(4ம் பக்கம் பார்க்க]

## தமிழகத்திலிருந்து 27ம்திகதி அகதிகள் இலங்கைவருகை

[சென்னை]

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும்பணி மீண்டும் இம்மாதம் 27.ம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் 114 முகாம்களில் தங்கியுள்ள 64,573 அகதிகளில் 6489 பேர் இலங்கைக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

இவர்களை இலங்கைக்குக் கொண்டு செலவதற்காக மத்திய அரசு இரு விசேட கப்

(4-ம் பக்கம் பார்க்க)

# 9013 மாணவர்கள் இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி

## கலை 3164; மருத்துவம் 871; பொறியியல் 635

(கொழும்பு)

புதிய கல்வி ஆண்டில் 9013 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான மொத்தப் புள்ளிகள் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்ட பின்னர் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகையுடன் ஒப்பிடுகையில் இம்முறை 303 பேர் அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி 871 மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கும், விவசாய பீடத்துக்கு 350 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 693 மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு 635 மாணவர்களும், கலைப்பீடங்களுக்கு 3164 மாணவர்களும், சட்டத்துறைக்கு 205 மாணவர்களும், 852

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

[யாழ்ப்பாணம்]

இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் வழமையான நேரத்தில் கிளாலி — பூநகரி படகுச் சேவை நடைபெறுமென தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான மண்ணெண்ணை விநியோகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. — மாணவர் அவை. (சி-1388)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepstit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1373)

சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இம் முயற்சியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களையும் அமைப்புகளையும் அமைச்சர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

சமாதான முயற்சியை குழப்புவதன் மூலம் எதிர்கால சமுதாயத்தினரின் நலன்கள் பாதிப்படையும். இதனைக் கருத்திற்கொண்டு சமாதான முயற்சியை குழப்பும் முயற்சியில் தனிநபர்களோ அல்லது பொதுஅமைப்புக்களோ ஈடுபடவேண்டாமென்றும் கேட்டுக்கொண்டார். க-இ

### கௌரவிப்பு

(சுன்ஞகம்)

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான லண்டன் லூசியான் மேயர் திரு. சின்னமணிக்கு மகாஜனக் கல்லூரியில் தேநீர்விருந்தளித்துக் கௌரவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க. நாகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உபஅதிபர் இராஜகுலேந்திரன், ஆசிரியர் கழகத் தலைவர் இந்திரசிங்கம், ஆசிரியை திருமதி இராமச்சந்திரா, பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆகியோரும் உரையாற்றினுர்கள். 165

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் தொண்டமானுறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 3ம்திகதி வெள்ளிக்கிழமை 3மணியளவில், அரை நிமிடம், என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவு நிகழ்த்துவார் அறிமுகவுரையை செ. ஜெகநாதன் வழங்குவார் -ம

0 0 0

(அரியாலை)

யாழ். குருநகர் புதுமை மாதா தேவாலயத்தில் இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை காணிக்கை அன்னை திருவிழா நடைபெறுகின்றது. திருவிழா கூட்டுத் திருப்பலி காணிக்கை அன்னை திருச்சொரூப பவனி அன்னையின் ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. 59

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் கோவில் மாதாந்தச் சதுர்த்தித் திருவிழா இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். 154

---

# அரசாங்க அறிவித்தல்

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம்

## 1995ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும், திருத்துனர்களையும் பதிவு செய்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நிறுவனங்களிற்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடம் இருந்தும், இயந்திரங்களைத் திருத்தக் கூடியவர்களிடம் இருந்தும் மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. காகிதாதிகள்

02. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)

03, வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்

04. மரத்தளபாடங்கள், திருத்த வேலைகள்

05. உருக்குத்தளபாடங்கள், உருக்குத் தளபாடத் திருத்தவேலைகள்

06. பிளாஸ்ரிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை குப்பை வாளி முதலியன)

07. இரும்பு, பித்தளை, கன இரும்புப்பொருட்கள். (ஆமைப் பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை-வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி, முதலியன)

08, மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், மின்சாரஇயந்திர திருத்தவேலைகள்.

09. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட் கட்டில்கள், சிறுகட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)

10. கட்டிடத் திருத்தத்திற்கு அவசியமான பொருட்கள் கட்டிடத் திருத்தம்

11, மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர். டியூப் உட்பட) வாகனத் திருத்தம்.

12. தட்டச்சு இயந்திரம், ரோனியோ இயந்திரம், நிழல் பிரதி எடுக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் திருத்த வேலைகள்

### பதிவுசெய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சன சமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்.

மேற்படி வழங்குனர்களாகவும்திருத்துனர்களாகவும் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்தில் உள்ள எமது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 17-02-95 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1995ம் ஆண்டிற்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் இயந்திரங்கள் திருத்துவதற்கும் கேள்விகள் பதிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா
பதில் மாகாண பிரதிப்பணிப்பாளர்

சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்
பணிப்பாளர் பணிமனை
59, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-4757)

---

மோட்டார் வாகன சாரதிப் பரீட்சைகளுக்கான பணிநிலை

## வெற்றிடம்

மோட்டார் வாகன சாரதிப் பரீட்சகர் பணிநிலை வெற்றிடத்தை நிரப்புவதற்கு தமிழீழ பிரஜைகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியெய்தியவர்களும்,

★ மோட்டார் வாகன சாரதிப் பரீட்சகர் பணிநிலையில் ஏற்கனவே சிறந்த பட்டறிவு உடையவர்களும்,

★ (அனுபவம்) சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களும் தங்களுடைய கல்வி, பட்டறிவு, குணநலச் சான்றிதழ்களுடன் அலுவலக நேரங்களில் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்திற்கு நேர்காணலுக்காக சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

★ (ஊதியம் நேர்காணலின்போது பேசித் தீர்மானிக்கப்படும்)

பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
தமிழீழம்.

(ஏ-4766)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிமிருந்து கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1995-03-31 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தாவரவியல் பேராசிரியர்
2. புள்ளி விபரவியல் பேராசிரியர்
3. பௌதிக இரசாயனவியல் பேராசிரியர்

சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர் -ரூபா 16,100 - 6X400 - 18,500/-

இத்துடன் (அ) நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுப் படியாக 1995 யூன் 30 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25% சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

(ஆ) ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும். நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10%மும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9/93 இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20 செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்வோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள். அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களில் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களையும் இதரவிபரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-01-20.

(ஏ-1764)

### மணிவாக்கு

''அரசன் ஒழிக'' என்று கைதிகள் கூச்சலிட்டாலும் கைதிகளுக்கு உணவு கொடுத்து அரசன் காப்பாற்றுகிறான். அதுபோலவே ''கடவுள் இல்லை'' என்று நாத்திகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்றுகிறார்.

– திருமுருக கிருபானந்தவாரியார்

## நமது நோக்கு

### இழுத்தடிப்பு வேண்டாமே!

பூநகரி முகாம் விவகாரத்தை அரசு பூதாகரமாக்கக் கூடாது என முன்னாள் ஹூசியன் மாநகர முதல்வர் சின்னமணி தெரிவித்துள்ளார்

முன்னைய அரசுக் காலத்திலும் அவர் இங்கு வந்து பல ஆலோசனைகளை எடுத்துக் கூறினார்.

''பிரச்னையே இல்லை; அப்படியாயின் பிறர் எமக்கு ஆலோசனையா?'' என இறுமாப்போடு இருந்த அரசு இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்டது.

தற்போது - புதிய அரசு மக்களின் ஆணை பெற்று, நிரந்தரத் தீர்வை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது எனப் பிறநாட்டவர்கள் நம்பும்படியாகச் செய்திகள் வந்தன.

நிலைமையைக் காண வந்த முன்னாள் ஹூசியன் முதல்வருக்கு இங்கு நேரில் கண்டறிந்து கருத்துக் கூறவாய்ப்புக்கிடைத்தது.

நான்காம் கட்டப் பேச்சை நோக்கி அரசு நகர முடியாமல் இருப்பதற்கான காரணம் பூநகரி முகாம்பற்றிய விவகாரமும் என்பதை அவர் உணர்ந்து அரசுக்குஆலோசனை தந்திருக்கிறார்.

முன்பு - வடகிழக்கு இணைப்பைப் பெரிய சிக்கலாக்கி, பூதாகரமாக்கி, அதனைக் காரணங் காட்டியே தீர்வுத் திட்டம் முன்வைக்காது அரசு இழுத்தடித்தது.

அதனால் - பல இழப்புக்கள் ஏற்பட்டன; பொருளாதாரம் சீரழிந்தது; இனங்களுக்கான நம்பிக்கையீனம் வளர்ந்தது.

இன்று - புதிய அணுகுமுறையில் தீர்வு காண்பதற்காக மக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க முன்வந்த அரசு, தடம் புரண்டு தடுமாறுவதேன்?

அச்சுறுத்தித் தீர்வைத் திணிக்கலாம் என்ற பழைய நிலைக்கு மீண்டும் செல்ல ஜனாதிபதியைத் திசை திருப்பும் சக்திகள் எவை?

நம்பிக்கையை வளர்த்தெடுத்துக் கருமம் ஆற்ற வேண்டியவர்கள், சிறு துரும்பைத் தூணாக்கி, நம்பிக்கையீனத்தை வளர்த்தால் காலம் வீணாகுவதோடு, நிலைப்பாடுகளில் மேலும் உறுதிப்பாட்டை வலுச்செய்யவே வழி வகுக்கும் என்பதை அரசு உணராமல் இருப்பது வேதனைக்குரியதே.

வெளிநாட்டவர்கள் இங்குள்ள யதார்த்த நிலை உணர்ந்து கூறும் கருத்துக்களுக்குச் செவி சாய்க்க வேண்டியது அரசின் கடமை!

# தேசிய கொடியில் மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை தேசியக் கொடியில் மாற்றம் செய்வதற்கு பொ. ஐ. மு. அரசாங்கம் எண்ணியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் வாரத் தமிழ்ப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், பொ.ஐ.மு.அரசு தயாரித்த உத்தேச அரசியல் அமைப்பில் தேசியக் கொடி, தேசிய கீதம், தேசியப் பூ, தேசிய பறவை போன்ற பல்வேறு தேசிய சின்னங்கள்மாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. எனினும் இவற்றுக்குப் பதிலாக உத்தேசிக்கப் பட்டிருப்பவை எவை என்று இன்னும் பூரண முடிவுக்கு அரசு வரவில்லை.

நீண்டகாலமாக சிறுபான்மை மக்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்திவந்ததேசியக் கொடியிலும், தேசிய கீதத்திலும் மாற்றம் செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் எண்ணியுள்ளது. அதன் துணிவைப் பாராட்டத்தான் வேண்டும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (வி-ரி)

### விசேட வங்கி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

இன்று 3. 2. 95 வெள்ளிக்கிழமை விசேட வங்கி அரைநாள் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இலங்கை வங்கிக் கிளைகளில் வாடிக்கையாளர்களுக்கு காலை 9·00 மணி முதல் 10. 00 மணி வரை மட்டும் வழமையான வங்கிச் சேவை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலதும் பத்தும்

#### ஒரே நேரத்தில்...

ஒரே நேரத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ... ஒரே வித கிரகநிலை இருப்பதால் ... ஒரே மாதிரியான குணாதிசயங்கள் இருக்குமா? அமெரிக்க ஆய்வாளர் ஜோசேப் குடாவெக் இது பற்றி 80 குறிப்புகளைத் தொகுத்து நூல் வெளியிட்டுள்ளார். அதில் இரண்டு மாத்திரம்;

(1) டோனி - ரோஜர் இரட்டையர்கள். டோனி இத்தாலியப் பெற்றோரிடமும், ரோஜர் யூதப் பெற்றோரிடமும் வளர்ந்தவர்கள், ஒருவரை ஒருவர் அறியாமல். 24 வயதிற் சந்தித்த போது, ஒற்றுமைகளைக் கண்டு பிரமித்துவிட்டார்கள். இருவருமே ... 6 அடி 3 அங்குலம்; இடதுபுறம் தலை வாருதல்; ஒரே 'பிராண்ட்' பற்பசை, ஒரே ரக சிகரட்; ஒரே ரக மதுப் பாவனை; இருவருக்குமே வலதுபுறக் கீழ்ப்பகுதியில் மறு!

(2) 1933 செப்டம்பர் 5ல் ஒரே நேரத்தில் - கலிபோர்னியாவில் வெவ்வேறு பெற்றோருக்குப் பிறந்தவர்கள்- இருவருக்குமே ஒரே பெயர் டொனல்ட் - 10-9-56ல் இருவருமே தமது காரிற் சென்று தமது காதலிகளைச் சந்தித்துவிட்டுத் திரும்பும் போது ... இருவர் காரும் ஒரே நேரத்தில் ஒன்றோடொன்று மோதி இருவருமே பலியானார்கள்! இருவருக்குமே பல ஒற்றுமைகள் காணப்பட்டதாம்!

– மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–02–03**

வெள்ளி இரவு

| | |
|---|---|
| 08-01 | கலை மஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் - அறிமுகமானது பொம்மை வெளி சிறுவர் போசாக்குப் பராமரிப்பு பூங்கா 2-ம் ஆண்டு நிறைவு மலர் அதனையடுத்து சிறுகதை சத்தியமூர்த்தி எழுதிய ''எழுகை'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ந: கிருஷ்ணா எழுதிய 'வளமமைத்து வாழ்வோம்' |
| 08-25 | கணப்பொழுது க. சிவராசா எழுதிய 'லெப்ரினன்ட் பரமதேவா' |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய 'நம்பிக்கையொளி தோன்றுகின்றது' |
| 08-50 | வாத்திய கானங்கள் |
| 09-00 | இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

**1995–02–04**

சனி காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம் |
| 07-15 | நீங்கள் கேட்டவை |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகை செய்திகள் |
| 07-40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–02–03**

வெள்ளி மாலை

| | |
|---|---|
| 05-00 | ஒலிபரப்பு ஆரம்பம் |
| 05-01 | சிந்தனைச் சிதறல் |
| 05-02 | எழுச்சி கீதம் |
| 05-10 | புதியவை |
| 05-15 | மழலைகளுக்காக |
| 05-30 | மண்ணின் குரல் 'கால்நடை வளர்ப்பது சுலபம்' தனி நடிப்பு தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் |
| 05 40 | நேயர் கடிதங்கள் |
| 05-45 | தமிழீழ கானங்கள் |
| 06-00 | சிந்தனைக்குச் சில விநாடிகள் |
| 06-02 | நாடகம் அளவையூரான் எழுதிய 'நடேசு வாத்தியார்' தொடர்ந்து என் தெரிவு |
| 06-30 | மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

## இராசி பலன்

**03–02–1995**

வெள்ளிக்கிழமை

**(தமிழுக்கு தை 20)**

சதுர்த்தி பின்னிரவு 3-26 வரை; பூரட்டாதி பி. ப. 5-10 வரை: சித்தயோகம் சதுர்த்தி விரதம் இராகுகாலம் காலை 11 05 முதல் 12-35 வரை; சுபவேளை மாலை 3-35 முதல் 5-05 வரை.

மேடம்: மனநிலை மாற்றம், காரியத்தடை, அகம்பாவம்

இடபம்: இலட்சியக் கனவு, தொழில் மேன்மை, புதிய அறிமுகம்

மிதுனம்: கருத்தொற்றுமையியான சிந்தனை, பணவரவு

கடகம்; குடும்ப மனஸ்தாபம், நண்பர் பிணக்கு, வெறுப்பு

சிங்கம்; புத்திக் கூர்மை, தொழில் பாராட்டு, மன நிறைவு

கன்னி: மங்கள காரியம், அறிஞர் சந்திப்பு, பொதுப் பணி

துலாம்: வாக்கு விரோதம், புத்திரர் கவலை, அலைச்சல்

விருச்சிகம்: தொழில் நஷ்டம், தாமத முயற்சி, துரோகத்தனம்

தனுசு: குடும்பக் கஷ்டம், மனவேதனை, வழிப்பயம்

மகரம்: கலந்துரையாடல், அதிக வசதி, சகோதர உதவி

கும்பம்: பின்நிற்றல், கண்டனம், குழப்பமடைதல்,

மீனம்: தொழில் பதற்றம், சினம் கொள்ளல், பணியாள் வெறுப்பு

ஜோஸ்யர்

# இரு தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளுக்கு மேலும் இரு தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப்பரீட்சார்த்திகளுக்கு இம்மாதம் 9ம்திகதி கொழும்பு சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள மக்கள் வங்கி தலைமைச் செயலகத்தில் நடைபெறஇருக்கும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்குஅழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு:- செல்வி மதனராணி இராசா (நெல்லியடி, கரவெட்டி), செல்வி ஜீவதயாபரி கணேசராசா (பழைய தபால் கந்தோர் வீதி, சங்கானை)

(162-ரி)

# நாட்டின் தலைவராக அநுராவைநியமிக்கமுயற்சி

(கொழும்பு)

நாட்டின் அடுத்த தலைவராக அனுரா பண்டாரநாயக்காவை நியமிப்பதற்கு திரைமறைவில் பல இரகசிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக 'கினிஹர' பத்திரிகை தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா மேல் தற்போது மக்களிடையே ஏற்பட்டுவரும் வெறுப்புணர்வுகளை சாதகமாகப் பயன்படுத்தி, அனுராவை முன்னுக்கு கொண்டு வரும் முயற்சிகளில் பௌத்த மதத் தலைவர்களும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அனுராவை முன்னுக்கு கொண்டு வருவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஈடுபட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவும் அனுராவுக்கு கிடைக்கும் என்றும் 'கினிஹர' மேலும் தெரிவித்துள்ளது. ம-சி

### சுகவாழ்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஆதரவில் எதிர்வரும் 08. ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகம் கைலாசபதி அரங்கில் ''சுகவாழ்விற்கு வாய்ச் சுகாதாரம்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது

### வெள்ளி விருந்து

# சிவவேடத்தாரை வழிபட்டு சிவபெருமானை அடையப்பெற்றவர்!

கலிக்கம்பநாயனார் திருநாள் தை இரேவதி. அந்த நன்னாள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை.

நாயனார் திருப்பெண்ணாகடம் என்னும் திருப்பதியைச் சேர்ந்தவர். வணிக குலத்தில் வந்துதித்தவர். சிவவேடத்தாரை வழிபட்டுச் சிவபெருமானை அடையப்பெற்றவர்.

கலிக்கம்பர் தமது இல்லத்தில் சிவனடியார்களைத் திருவமுது செய்விக்கும் பணிபூண்டவர்.

சிவனடியார்கள் அவர் இல்லத்தில் அமுது செய்ய எழுந்தருளினார்கள். வழமைபோல முதலில் அடியார்களுடைய திருப்பாதங்களை விளக்கத் தொடங்கினார். அவருடைய மனைவியார் தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தார். அந்த வரிசையில் கலிக்கம்பருக்குப் பணியாளராக இருந்தவர் ஏவல் பணியைச செய்ய மறுத்துக் கோபித்துச்சென்ற உறவினர் ஒருவரும் சிவவேடம் தாங்கி அடியார்களின் பின்னதாக வந்துகொண்டிருந்தார். கலிக்கம்பர் அவர் பாதத்தை விளக்கத் தமது கைகளால் பிடித்தார்.

மனைவியார் அவர் முன்ச் வேலை செய்யாது கோபித்துபு சென்ற உறவினர் போலும் என்று அறிந்து நீர் வார்க்கவில்லை, மனைவியாருடைய அச்செயலைக் கலிக்கம்பர் தமது மனதில் கருதுவார். இந்தச் சிவனடியாருடைய முன்னைய நிலையை உணர்ந்து வெட்கப் பட்டு நீர் வாராது விட்டார் என்று கருத்திற்கொண்டு கூர் வாளை எடுத்து, வாழ்க்கைத் துணைவியார் கரத்திலிருந்த ''கெண்டியை' வாங்கி அவர் கரத்தை வெட்டினார்.

கலிக்கம்பர் நீர் எடுத்து அடியார் பாதத்தை விளக்கினார். பின்னர் வேண்டுவன எல்லாம் தாமே சீர்செய்து கலங்காத சிந்தையோடு சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தார். அத்திருத்தொண்டில் நின்று நெடுங்காலம் சிவனடியார்களை வழமைபோலத் திருவமுது செய்வித்த பேற்றினால் சிவபெருமானுடைய திருவடி நிழலில் அடியாரோடும் கலந்தருளினார் கலிக்கம்பநாயனார்

— சிவ சண்முகவடிவேல்

மனம் ஆயிரம் சொல்லுமே
மரம் ஆயிரம் கண்டால்

# சமாதானத்திற்கான ஆர்வம் சிங்களவரிடம் உருவாகியுள்ளது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் தமது பாசத்திற்குரியவர்களை இழந்துபெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்களாலேயே சமாதானத்திற்கான ஆர்வம் சிங்கள மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளரான சசந்தா பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ஜே.வி.பி. காலப்பகுதியில் சிங்கள மக்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தமிழர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை உள்ளபடி உணர ஏதுவாகின்றது.

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் தேர்தல் வெற்றிமூலம் இனவாதம் நிராகரிக்கப்பட்டுள்ளது என எண்ணுதல் தவறானதாகும் அவ்வாறு அப்பாவிததனமாக சிந்திக்கக்கூடாது.

சிங்கள சமூகத்தின் மத்தியில் பல தசாப்தங்களாக நிலவுகின்ற இனவாத அரசியலும், புரிந்துணர்வின்மையும் சில தேர்தல்கள் மூலம் மறைந்துவிடும் என எண்ணுதல் தவறானதாகும்.

விடுதலைப்புலிகள் நினைகின்ற நிர்வாக அலகு மாகாண அமைப்பு அல்ல. அவ்வாறான நிர்வாக அமைப்பு விடுதலைப் புலிகள் தற்போது அமைத்துள்ள அரசியல் நிர்வாக இராணுவகட்டமைப்புகளிலும் குறைவு என்பதனால் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார். க-இ

## தமிழர்க்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாயகம் ஒன்றுள்ளது. தமது அரசியல் நிலைப்பாட்டை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அமெரிக்க- கலிபோர்னிய மனிதாபிமான சட்ட நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான ஐக்கியநாட்டு சபையின் 51வது கூட்டத் தொடரில் இந்த அமைப்பினால் இவ்வாறான கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் மாநாட்டு நிகழ்ச்சியில் இது ஒன்பதாவது அம்சமாக இடம்பெற்றுள்ளது. கே-இ

## 9013 மாணவர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் வர்த்தக துறைக்கும் முகாமைத்துவ கல்விக்கு 643 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனா.

பௌதிக விஞ்ஞான பீடங்களுக்கு 1150 மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

சகல பீடங்களுக்கும் மாணவர்களை அனுமதிக்கும் மொத்தப்புள்ளி 20 னால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் நேற்று கொழும்பில் இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதி உயர் கல்வியமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால 1994/1995 கல்வியாண்டில் பல்கலைக்கழக பிரவேசத்திற்கான அடிப்படை தகைமையை 48ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பெற்றுள்ளனர் என்றார்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர்தர் வெதமுல்ல தெரிவிக்கையில்: க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற உயர்புள்ளிகளின் அடிப்படையிலே மொத்தப் புள்ளிகளும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். க-இ

## டெலிக் கற்கைநெறி

[யாழ்ப்பாணம்]

'டெலிக்' கற்கை நெறியை பயிலுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் நாளை 4ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கற்கை நெறி இணைப்பாளரைத் தவறாது சந்திக்கும்படியும் இக் கற்கை நெறி எதிர்வரும் ஏப்ரல்மாதம் 7ம் திகதி தொடக்கம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென்றும் யாழ் வலயம் 1, கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இ

## மோட்டார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் வாகனங்களை ஓட்டும்போது அதற்கான ஒழுங்கு விதிகளைப் பேணுவதில் அசமந்தமான நிலை காணப்படுகிறது,

இவ்வாறானசூழ்நிலை தொடர்ந்தும் இருக்கா வண்ணம் இதனை ஓர் நிறுவன ரீதியான செயற்பாட்டின் கீழ்கொண்டு வந்து அதற்கான ஒழுங்கமைப்புக்களைச் செய்வதற்கும் அதனைச் செயற்படுத்துவதற்கும் தமிழீழ நிர்வாக சேவையில் மோட்டார் வாகனச் சாரதிக்கான அனுமதி வழங்கும் பிரிவு ஒன்று எதிர்வரும் 15ம் திகதி தொடக்கம் செயற்படவுள்ளது.

இதன் செயற்பாடானது தமிழீழத்திற்குள் சொந்தத்தில் மோட்டார் வாகனம் வைத்திருப்பவர்களுக்கு, ஊதியத்திற்கு வாகனங்களை ஓட்டுனர்களுக்கும், திணைக்களங்கள், நிறுவனங்களின் வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும், சகல வகுப்பு வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறைகளைச் செய்யும். இதற்கான சகல ஆவணங்களும் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

சகல ஆவணங்களையும் பெற்று பூரணப்படுத்தியபின் (வைத்திய பரிசோதனை உட்பட)சம்பந்தப்பட்ட ஓட்டுனர்கள் வாகனங்களைச் செலுத்துவதற்கான சாரதிப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு ஒரு மாதத்தின் பிற்பாடு சம்பந்தப்பட்டவருக்கு வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

தமிழீழ நிர்வாகசேவையில் மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதி வழங்கும் பிரிவு ஆரம்பித்த நாளிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் சகல வகுப்பு வாகனங்களையும் ஓட்டுனர்கள் வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். இக்குறிப்பிட்ட காலத்துக்குள் சகல வகுப்பு வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறத் தவறும் வாகன ஓட்டுனர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிய விரும்புபவர்கள் எதிர்வரும் 15ம் திகதி தொடக்கம் செயலக நேரங்களில் அதற்குரிய பொறுப்பாளர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது. (இ)

## காணாமல் போன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர்கள்.

இவ்வாறான குடும்பங்கள் தத்தமது மாவட்டங்களில் உள்ள பிரதேசசெயலகங்களில் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு அரசாங்கம் ஒழுங்குகளைச் செய்துதர வேண்டுமென்று பொதுமக்கள் தற்போது அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள். —வி-இ

★ 2-வது உலக யுத்தத்தில் வீசப்பட்ட

# 250 கிலோ. குண்டு ஜெர்மனியில் கண்டுபிடிப்பு

[பொன்]

இரண்டாவது உலக யுத்தத்தின்போது விமானத்திலிருந்து போடப்பட்ட வெடிக்காத 250 கிலோ கிரும் எடையுள்ள குண்டு ஒன்று நேற்று ஜெர்மனியின் பேர்லின் நகரில் கண்டுபிடிக்கப்பட்டது.

நிலத்தில் புதையுண்டுகிடந்த இக்குண்டை கண்ட விவசாயி ஒருவர் பொலிசாருக்கு தகவல் தெரிவித்தார். ஜெர்மனியின் பேர்லின் நகருக்கு வடக்கேயுள்ள 'ஒறினியன்பாக்' பகுதியில் இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இக்குண்டை செயலிழக்கச் செய்வதற்குமுன் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரையும் பொலிசார் வேறிடங்களுக்கு அப்புறப்படுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி இ)

போரினால் பாதிக்கப்பட்ட

# கூட்டுறவு ஊழியர்க்கும் நஷ்டஈடு வழங்கப்படும்

(கொழும்பு)

வடக்கு—கிழக்கு யுத்தத்தினால் சேதமடைந்த உடைமைகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு அப்பகுதிகளைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை கச்சேரியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அமைச்சர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,—

தற்போது அரசாங்க ஊழியர் மாத்திரமே நஷ்டஈடு பெற்றுக்கொள்ளும் நிலை உள்ளது. ஆயினும் இம்முயற்சி விரிவுபடுத்தப்படும்.

இது அமைச்சரவையின் அனுமதிக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றார். —க-இ

## பென்ஷன் வவுச்சர்

மானிப்பாய்)

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களினதும் றெயில்வே திணைக்கள ஊழியர்களினதும் ஜனவரி மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் உரியவர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டன,

சம்பந்தப்பட்டவர்கள் இன்று இவற்றை வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. 71-இ

## இளைஞர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இலங்கை இராணுவத்தினர் இரு இளைஞர்களை நோக்கி துப்பாக்கிப் பியோகப் மேற்கொண்டதாக இலங்கை இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கப்பூர் வானொலி நேற்றுந் தெரிவித்தது.

இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இவ்விரு இளைஞர்களும் பிரவேசித்ததாலேயே இவ் இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டதாகவும் இவ்விருவரும் விடுதலை புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். க-இ

## தமிழகத்திலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்களை தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

வேறு மாநிலங்களில் விசேட முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் இலங்கை அகதிகளும், அவர்களின் விருப்பத்தின் பேரில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

3400 பேரை ஏற்றிக் கொண்டு இம்மாதம் 27-ம் திகதி விசேட கப்பலொன்று இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு புறப்படும் மார்ச் மாதம் முதலாம் திகதி மற்றொரு கப்பல் மூலம் மூவாயிரம் அகதிகளை ஏற்றிக் கொண்டு சென்னையிலிருந்து திருகோணமலை நோக்கிப்புறப்படுமென்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். வி-இ

கிளிநொச்சி

# விவசாயபீட மாணவர்க்கு போக்கு வரத்து ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி விவசாய பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை போக்கு வரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 1மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலும், தென்மராட்சிகோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 1-30 மணிக்கு சாவகச்சேரி பேருந்து நிலையத்திலும், வடமராட்சிக கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் பேருந்து நிலையத்திலும் ஒன்று கூடுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# நெதர்லாந்தில் வெள்ள அபாயம் நீங்கவில்லை

(லண்டன்)

நெதர்லாந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்கு அபாயத்திலிருந்து அந்தநாடு இன்னமும் விடுபடவில்லையென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நெதர்லாந்து நாட்டின் மிச்மெகனின் நகரின் மேற்குப் பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற றையின்நதியின் அணைக் கட்டுகள் எந்த நேரத்திலும் உடையும் அபாயத்தில் இருப்பதினால் அந்த இடத்திலுள்ள பத்து லட்சம் மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுவருகின்றார்கள்.

இந்த நதியைச் சுற்றியுள்ள பல இடங்கள் மனித நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடப்பதாகவும் நதியின் அணைக் கட்டுகளைப் பாதுகாக்கும் பணியில் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிசாருப் பகல் இரவாக ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேநேரம் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளில் வெள்ளம் தணிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வி-இ

## கண்காணிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளே யாழ் நகர் வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. —வி-இ

## பேச்சு தடைப்பட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாமதமடைந்தது. கண்காணிப்புக் குழுவினரை தாம் முதலில் சந்திக்கவேண்டும் என புலிகள் கோரியதை யடுத்தே மேற்படி கூட்டம் தாமதமடைந்தது.

அரசுடன் மேற்கொள்ளும் நேரடிப் பேச்சுக்கள் நின்றுவிட்டபோதிலும் சமாதான முயற்சிகளை விடுதலைப்புலிகள் கைவிடவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது எனவும் சந்தேசய தெரிவித்தது. —இ

## அநாமதேய

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கேணல் அநுருத்த ரத்வத்த பொதுமக்களை கேட்டுள்ளார்.

தேசிய நடவடிக்கைகள் பணியகத்தின் அந்தரங்க தகவல்கள் வெளிநாட்டு உளவுச் சேவை நிறுவனங்களுக்கு விற்கப்பட்டதென சிங்களப் பத்திரிகையான 'தினமின' வில் நேற்று வெளியான செய்தி பற்றிக் கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இத்தகைய செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை,

அநாமதேய கடிதங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு கவனத்திற்கெடுப்பதில்லை. இது போன்று பொறுப்பற்ற விதத்தில் செய்திகளை வெளியிடுவது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாகும்.

சம்பவங்களை உரியமுறையில் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார். க இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-